
# காசநோய் பற்றிய 3 பொதுவான தவறான கருத்துக்கள் இவை

## இவற்றை பொய் என்று நிரூபிப்போம்!





National Centre for Infectious Diseases

# “காசநோய் சிங்கப்பூரில் இல்லை. இது சிங்கப்பூரை தவிர்த்து வெளிநாடுகளில் மட்டுமே உள்ளது.”

1

## இது தவரான கருத்து.



சிங்கப்பூரில் காசநோய்
பரவலாக உள்ளது.
2021 -இல், சிங்கப்பூர்
குடியிருப்பாளர்களிடையே 1,306 புதிய
காசநோய் தொற்றுகள் ஏற்பட்டன!



National Centre for
Infectious Diseases


# “எல்லா வகையான காசநோய்களும் தொற்றக் கூடியவையே.”

2

## இது தவரான கருத்து.



நுரையீரல் அல்லது குரல் பெட்டியில் காசநோயைக் கொண்டிருக்கும் ஒருவர் அந்நோயை மற்றவர்களுக்குப் பரப்பக்கூடியவர். ஒருவரின் உடலின் மற்ற பகுதிகளில் உள்ள காசநோய் மற்றவர்களுக்குத் தொற்றாது.



மறைந்திருக்கும் காசநோய் தொற்று உள்ள ஒரு நபர்  மற்றவர்களுக்கு நோயைப் பரப்ப முடியாது. மறைந்திருக்கும் காசநோயால் (Latent TB) பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 5% பேர், பாதிக்கப்பட்ட முதல் 2 வருடங்களில் காசநோய் தொற்றுக்கு (Active TB) ஆளாகலாம்.

National Centre for Infectious Diseases

# “பேசிலஸ் கால்மெட்-குரின் (BACILLUS CALMETTE-GUERIN, BCG) தடுப்பூசி என்னை காசநோயில் இருந்து முற்றிலும் பாதுகாக்கிறது.”

3



## இது தவரான கருத்து.

BCG தடுப்பூசியானது, குழந்தைகள் மற்றும் இளம் குழந்தைகளைக் காசநோய் மூளைக்காய்ச்சல்* மற்றும் பரவலான காசநோய் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பதில் ஆற்றல்வாய்ந்ததாக இருக்கிறது.

காசநோயின் மிகவும் அதிக எண்ணிக்கையில் இருப்பது நுரையீரல் காசநோய்#. BCG தடுப்பூசி, நுரையீரல் காசநோய்க்கு எதிராக **மிதமான பாதுகாப்பை மட்டுமே** வழங்குகிறது.

*காசநோய் மூளைக்காய்ச்சல், மூளையின் புறணியை பாதிக்கிறது
#நுரையீரல் சார்ந்த காசநோய், நுரையீரலைப் பாதிக்கிறது




National Centre for Infectious Diseases